## அனைவரும் ஒத்துழைத்து - சுதந்திரமான, நேர்மையான கழகத் தேர்தல் மூலம்

# புதிய நிர்வாகிகள் - இளைஞர்கள் பொறுப்புகளுக்கு வருவார்கள்!

## கழக மறுசீரமைப்புப் பிரதிநிதிகள் கூட்டத்தில் தலைவர் மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தல்!





சென்னை, செப்.4-

**“சுதந்திரமான - நேர்மையான தேர்தல் மூலமாகப் புதிய நிர்வாகிகள், இளைஞர்கள் பொறுப்புகளுக்கு வருவார்கள். அதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்” எனவும், “செயற்குழு தீர்மானங்களின் அடிப்படையில், வயது வரம்பு காரணமாகவும் - ஒருவர் எத்தனை முறை பதவியில் இருக்கலாம் என்ற வரம்பு காரணமாகவும் பொறுப்புகளை இழப்பவர்கள் யாரையும் தலைவர் கைவிடப் போவதில்லை; அவர்கள் அனைவருக்கும் அவர்கள் தகுதிக்கேற்ற வேறு பொறுப்புகளை வழங்கும் வகையில் தலைவர் முடிவெடுப்பார்” என்பதை மாவட்டச் செயற்குழுக் கூட்டத்தில் முன்னிலை வகித்துச் சொல்லுங்கள் எனவும், கழக மறுசீரமைப்பு பிரதிநிதிகள் கூட்டத்தில் கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.**

நேற்று முன்தினம் (02-09-2026) மாலை, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில், கழக மறுசீரமைப்பு தலைமைக் கழக பிரதிநிதிகள் கூட்டம் காணொலி வாயிலாக நடைபெற்றது. இக்கூட்டத்தில் கழகத் தலைவர் அவர்கள் ஆற்றிய உரையின் விவரம் வருமாறு:-

“அனைவருக்கும் வணக்கம்!

### முதன் முதலில் ஆட்சியைப் பிடித்து சாதனை படைத்த மாநிலக் கட்சி தி.மு.க.!

நாட்டிலேயே முதன்முதலில் ஆட்சியைக் பிடித்த மாநிலக் கட்சி - சாதனைகள் பல படைத்த கட்சி என்ற பெருமை நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இருக்கிறது. அதற்குக் காரணம், அப்படியே தேங்கி நின்றுவிடாமல், காலத்திற்கு ஏற்ற மாதிரி நாம் அப்டேட் ஆகி - அப்கிரேட் ஆவதுதான்.

“மாற்றங்கள் நம்மிலிருந்துதான் தொடங்க வேண்டும்” என்று சொல்லி, DMK 2.0-விற்கான பயணத்தை இப்போது நாம் தொடங்கியிருக்கிறோம்.

## பொறுப்புகளை இழப்பவர்களை கைவிடாமல் தகுதிக்கேற்றவாறு பொறுப்புகளை வழங்குவேன்!

நடந்து முடிந்த தேர்தலில் நமக்கு ஏற்பட்ட பின்னடைவுகளுக்குக் காரணம் என்ன என்று ஆராய்ந்து, வெற்றிப் பாதைக்கு நாம் திரும்ப வேண்டும் என்று பல்வேறு முன்னெடுப்புகளை எடுத்துக் கொண்டு இருக்கிறோம்.

முதலில், கள ஆய்வுக் குழுவை அனுப்பி, நிர்வாகிகளிடம் கருத்து கேட்டோம். ஆன்லைனில் தொண்டர்களிடம் கருத்து கேட்டோம். அதில் வந்த அறிக்கையையெல்லாம் நான் முழுமையாகப் படித்தேன்.

### கழகத்தின் கட்டமைப்பில் மேற்கொள்ளப்படும் சீரமைப்புகள்!

அதில் வந்த கருத்துகளின் அடிப்படையில், கழகத்தின் கட்டமைப்பில் மேற்கொளள்ளப்பட வேண்டிய சீரமைப்புகளைப் பரிந்துரை செய்ய, கழக மறுசீரமைப்புக் குழுவை அமைத்தோம்.

அந்தக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில், செயற்குழுவில் பல்வேறு தீர்மானங்களைக் கொண்டு வந்தோம்.

அதன் தொடர்ச்சியாக, கடந்த 28-ஆம் தேதி 110 மாவட்டங்களை அறிவித்தோம். இந்தச் செயல்பாட்டின் அடுத்த கட்டப் பணியைச் சிறப்பாகச் செய்ய நேற்று முன்தினம், தலைமைக் கழகப் பிரதிநிதிகளாக உங்கள் அனைவரையும் அறிவித்திருக்கிறோம்.

கழக மறுசீரமைப்புக்கான தலைமைக் கழகப் பிரதிநிதிகளாக நியமிக்கப் பட்டிருக்கின்ற நீங்கள், என்னுடைய கண்களாகவும் - காதுகளாகவும் மாவட்டங்களுக்குச் சென்று, எந்தவித பாகுபாடுகளும் பார்க்காமல் - எந்தவித அழுத்தங்களுக்கும் அடிபணியாமல், கொடுக்கப்பட்டிருக்கின்ற பணிகளைச் சரியாகச் செய்துவிட்டு வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

### கழக மறுசீரமைப்புப் பிரதிநிதிகளின் பணிகள்!

நீங்கள் அனைவரும் உங்களுக்குப் பொறுப்பு வழங்கப்பட்டிருக்கின்ற மாவட்டங்களுக்குச் சென்று, மாவட்டச் செயற்குழுக் கூட்டத்திற்கு முன்னிலை வகித்து, அனைத்து தரப்பினரின் கருத்துகளையும் கேட்டு, மறுசீரமைப்புக் குழு வகுத்துத் தந்துள்ள வழிமுறைகளின்படி கழக அமைப்புகளை உருவாக்க வேண்டும்.

முக்கியமாக நீங்கள் சென்று முதலில் சொல்ல வேண்டியது என்னவென்றால், “கிளை முதல் தலைமை வரைக்குமான பொறுப்புகளுக்குத் தேர்தல்தான் நடக்கப் போகிறது என்று தலைவர் சொல்லிவிட்டார். அது அனைத்துமே சுதந்திரமான - நேர்மையான தேர்தலாகத்தான் நடைபெறும். அப்போதுதான் புதிய நிர்வாகிகள், இளைஞர்கள் பொறுப்புகளுக்கு வருவார்கள். அதற்கு நீங்கள் தான் ஒத்துழைக்க வேண்டும். அப்போதுதான் நாம் அனைவரும் சேர்ந்து பாடுபட்டு வளர்த்த கட்சியை, அடுத்த நூறு ஆண்டுகளுக்குக் கொண்டு செல்ல முடியும்” - என்று சொல்ல வேண்டும்.

அதேபோல், செயற்குழுவில் நிறைவேற்றிய தீர்மானங்களின் அடிப்படையில், வயது வரம்பு காரணமாகவும் - ஒருவர் எத்தனை முறை பதவியில் இருக்கலாம் என்ற வரம்பு காரணமாகவும் பலருக்கும் இப்போது இருக்கும்பொறுப்புகள் பறிபோகும்.

### மாவட்ட செயற்குழு கூட்டங்களில் சொல்லுங்கள்!

“அவர்கள் யாரையும் தலைவர் கைவிடப் போவதில்லை. அவர்கள் அனைவருக்கும் அவர்கள் தகுதிக்கேற்ற வேறு பொறுப்புகளை வழங்கும் வகையில் தலைவர் முடிவெடுப்பார்” என்பதையும் மாவட்டச் செயற்குழுக் கூட்டங்களில் எடுத்துச் சொல்லுங்கள். வழிகாட்டுதல் நெறிமுறைகளின்படி கழக அமைப்புகள் பிரிக்கப்படுவதை உறுதி செய்து, அனைவரின் ஒப்புதலையும் பெற்று தலைமைக் கழகத்தில் ஒப்படைக்கும் பணியை அடுத்த 15 நாட்களில் விரைந்து முடித்துத் தர வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இதையெல்லாம் நீங்கள் செய்து முடித்த பிறகுதான் உறுப்பினர் சேர்க்கையைத் தொடங்க முடியும்.

> **“கழக மறுசீரமைப்புக்கான தலைமைக் கழகப் பிரதிநிதிகளாக நியமிக்கப் பட்டிருக்கின்ற நீங்கள், என்னு டைய கண்களாகவும் – காதுகளாகவும் மாவட்டங்களுக்குச் சென்று, எந்தவித பாகுபாடுகளும் பார்க்காமல் – எந்தவித அழுத்தங் களுக்கும் அடிபணியாமல், கொடுக்கப் பட்டிருக்கின்ற பணிகளைச் சரியாகச் செய்து விட்டு வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.”**

### நம்முடைய கழக கட்டமைப்புதான் நம்மைத்தாங்கி நிற்கும்!

அடித்தளம் வலிமையாக இருந்தால்தான் கட்டிடம் உறுதியாக இருக்கும். வேர்கள் வலிமையாக இருந்தால்தான் ஆலமரம் உறுதியாக நிற்கும். அதுபோல நம்முடைய கழகக் கட்டமைப்புதான் நம்மைத் தாங்கி நிற்கும். அந்த ஆணிவேரைப் பலப்படுத்தும் பெரும் பொறுப்பு உங்கள் கைகளில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது என்பதை உணர்ந்து செயல்படுங்கள். இன்றைக்கு காலையில் மறுசீரமைப்புக் குழுவின் வழிகாட்டு நெறிமுறைகள் தலைமைக் கழகத்தின் மூலம் உங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கும். அதில் ஏதாவது சந்தேகம் இருந்தால் தங்கம் தென்னரசு அவர்களிடம் கேளுங்கள்.

### கொள்கையற்ற கட்டமைப்பு அற்ற கட்சிகள் மின்மினிப் பூச்சிகள்!

**கொள்கை அற்ற, கட்டமைப்பு அற்ற கட்சிகள் வரும் - போகும். மின்மினிப் பூச்சிகள் நிரந்தரம் கிடையாது; சூரியன்தான் நிரந்தரம்! நிலைத்து நிற்கும்!**

**கட்டமைப்பைப் பலப்படுத்தி, கொள்கைப் பயணத்தைத் தொடர்வோம்!**

**இன்று நாம் செய்யும் பணிகள் நாளை வரலாறாய் நிலைத்து நிற்கும்! கழகத்தை மறுசீரமைப்போம்! மீண்டு வருவோம்! மீண்டும் வெல்வோம்!**

இவ்வாறு தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

# வேலூர் வடக்கு மாவட்ட தி.மு.க. சிறப்பு செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் டி.எம்.கதிர் ஆனந்த் எம்.பி. அறிவிப்பு!



வேலூர்,செப்.4–

வேலூர் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் டி.எம்.கதிர் ஆனந்த் எம்.பி. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:–

வேலூர் வடக்கு மாவட்ட தி.மு.க சிறப்பு செயற்குழுக் கூட்டம் 06.09.2026 ஞாயிற்றுக்கிழமை மாலை 3.00 மணியளவில் மாவட்ட பொருளாளர் சி.நரசிம்மன் தலைமையில் தலைமை கழகத்தால் அறிவிக்கப்பட்டுள்ள தலைமை கழக பிரதிநிதிகள் இ.கருணாநிதி, ப. தாயகம் கவி ஆகியோர் முன்னிலையில் காட்பாடி எஸ்.ஏ.மஹால், ஆக்ஸிலியம் கல்லூரி, ரவுண்டானா அருகில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் கீழே குறிப்பிட்டுள்ள பொருள் குறித்து விவாதிக்கப்பட உள்ளது. எனவே, வேலூர் வடக்கு மாவட்ட தி.மு.க விற்குட்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்ட, மாநகர நிர்வாகிகள், ஒன்றிய, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், கழக அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

பொருள்: அண்ணா அறிவாலயத்தில் கழக தலைவர் தலைமையில் நடைபெற்ற தலைமை செயற்குழுக் கூட்டத்தில் கழக நிர்வாகச் சீரமைப்பு தீர்மானத்தின் அடிப்படையில் தலைமை கழகத்தால் அறிவிக்கப்பட்டுள்ள தலைமை கழக பிரதிநிதிகள் கொண்டு ஒன்றிய, பகுதி,பேரூர் மறுசீரமைப்பு குறித்து.

செப்டம்பர் 15 பேரறிஞர் அண்ணா, செப்டம்பர் 17 தந்தை பெரியார் அவர்களின் பிறந்தநாள் விழா மற்றும் முப்பெரும் விழா குறித்து.

கழக ஆக்கப்பணிகள்.

இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.



கழகத் தலைவர் தளபதியார் அவர்களால் பெரியார் விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ள தென்காசி தெற்கு மாவட்டம் மாநில விவசாய அணி துணைச் செயலாளர் கு.செல்லப்பா அவர்களை தென்காசி தெற்கு மாவட்ட முன்னாள் செயலாளர் பொ.சிவபத்மநாதன் நேரில் சந்தித்து வாழ்த்து தெரிவித்தார். நிகழ்வில் கடையம் வடக்கு ஒன்றிய செயலாளர் மகேஷ் மாயவன், கீழப்பாவூர் பேரூர் செயலாளர் ஜெகதீசன், கல்லூரணி ஊராட்சி மன்ற தலைவர் ராஜ்குமார். மாவட்ட விவசாய அணி துணை தலைவர் செல்வன் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

---

### வி.கே.முருகன் தலைமை! வை.முத்துராஜா எம்.எல்.ஏ. – எஸ்.ஜோயல் பங்கேற்பு!

# நெல்லை மத்திய மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் மு.அப்துல்வகாப் எம்.எல்.ஏ. அறிக்கை!



நெல்லை.செப்.4.

நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் இன்று (04-09-2026 வெள்ளிக்கிழமை) மதியம், 3.00 மணியளவில், பாளையங்கோட்டை வ.உ.சி. விளையாட்டு அரங்கம் பின்புறம் அமைந்துள்ள பி.பி.எல். மஹால் திருமண மண்டபத்தில், நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. அவை தலைவர் வி.கே.முருகன் தலைமையில் நடைபெறுகிறது.

இந்நிகழ்வில் தலைமைக் கழக பிரதிநிதிகள் வை.முத்துராஜா எம்.எல்.ஏ., மாநில இளைஞரணி துணைச் செயலாளர் ஜோயல் ஆகியோர் பங்கேற்று சிறப்பிக்கின்றனர் என நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு. அப்துல் வஹாப் எம்.எல்.ஏ தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது.

நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க செயற்குழு கூட்டம் இன்று (4ம் தேதி) பாளையங்கோட்டை பி.பி.எல்.திருமண மண்டபத்தில் மாலை 3 மணி அளவில் நடைபெறுவதை முன்னிட்டு தலைமைக் கழக பிரதிநிதிகள் சட்டமன்ற உறுப்பினர் வை.முத்து ராஜா, மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் ஜோயல் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொள்கின்றனர்.

சிறப்புமிக்க இக்கூட்டத்தில் நெல்லை மத்திய மாவட்டத்திற்கு உட்பட்ட மாநில நிர்வாகிகள், மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர கழக நிர்வாகிகள், பகுதி கழக செயலாளர்கள், ஒன்றிய செயலாளர்கள், பேரூர், வட்ட, கிளை கழக செயலாளர்கள் ஆகியோர் தவறாமல் கலந்து கொள்ளும் படி கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: 22.08.2026 அன்று சென்னை அண்ணா அறிவாலயத்தில், கழக தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற செயற்குழு கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி கழக மறு சீரமைப்பு பணி.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



விருதுநகர் மண்டலம் தொ.மு.ச. பொதுக்குழு கூட்டம் மத்திய சங்கத் தலைவர் வி.பார்த்திபன் தலைமையில், மண்டல பொதுச்செயலாளர் ரா.ராஜசெல்வம் முன்னிலையில் குற்றாலத்தில் உள்ள தொழிலாளர் நலத்துறை திரு.வி.க. இல்லத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தொ.மு.ச. போக்குவரத்து கழக கூட்டமைப்பின் பொருளாரும், திருநெல்வேலி மண்டல பொதுச்செயலாளருமான தர்மன், சங்க ஆலோசகரும், மாவட்ட கவுன்சில் செயலாளர் ஆர்.வி. மாடசாமி, சிமிண்ட்ஸ் மாநில பொதுச்செயலாளர் சௌந்தரராஜன், பொருளாளர் திரு வேட்டை போத்தி, மற்றும் டாஸ்மாக் பொதுச்செயலாளர் வளவந்தான், மத்திய சங்கத்தின் நிர்வாகிகள், கிளை நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.